செய்தி வெளியீடு எண்: 336 நாள் :13.07.2015

செய்தி வெளியீடு

தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்படி, மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை அலுவலர்களின் செயல்பாடுகள் குறித்த மாநில அளவிலான ஆய்வுக் கூட்டம், இன்று (13.07.2015) சென்னை, சேப்பாக்கம் எழிலகத்தில் மாண்புமிகு உணவு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் இரா. காமராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்படி, விலையில்லா அரிசி வழங்கும் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள், முந்தைய மாதத்தின் இறுதிக்குள் 60 சதவிகிதமும், மீதமுள்ள 40 சதவிகிதம் ஒதுக்கீட்டு மாதத்தின் 5ம் தேதிக்குள் நியாய விலை அங்காடிகளுக்கு, மாவட்ட ஆட்சியர் வழங்கும் வழித் தடங்களில் நகர்வு செய்யப்பட வேண்டுமென்றும், நியாயவிலை அங்காடிகள் குறித்த நேரத்தில் திறக்கப்பட்டு, உரியவர்களுக்கு, உரிய எடையில், உரிய தரத்தில், மாதத்தின் அனைத்து வேலை நாட்களிலும் குடும்ப அட்டைதாரர்கள் கோரும் பொருள்களை சீரான முறையில் விநியோகம் செய்யப்படுவதை வழங்கல் அலுவலர்கள் உறுதி செய்து தொடர்ந்து கண்காணிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அறிவுறுத்தினார்.

தமிழ்நாட்டில் 4 மாதத்திற்கு போதுமான புழுங்கல் மற்றும் பச்சரிசி கையிருப்பில் உள்ளதாகவும், சர்க்கரை, கோதுமை, பருப்பு வகைகள், பாமாயில் முதலான மானிய விலை பொருட்கள் அந்தந்த மாதத்தின் தேவைக்கேற்ப கொள்முதல் செய்யப்பட்டு, அங்காடிகளுக்கு நகர்வு செய்யப்பட்டு வருகின்றன என்றும் மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார்.

பொது விநியோகத் திட்டத்தில் காணப்படும் குறைபாடுகளை களைவதற்கு, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மூலமாக மாதந்தோறும் 2ஆம் சனிக்கிழமைகளில்

நடத்தப்படும் குறைதீர் முகாம்களில், ஜூன் 2015 வரையில், 3 இலட்சத்து 71 ஆயிரத்து 570 மனுக்கள் பெறப்பட்டு, அவற்றில் 3 இலட்சத்து 54 ஆயிரத்து 860 மனுக்கள் அன்றைய தினத்திலேயே தீர்வு செய்யப்பட்டும், மீதமுள்ள 16 ஆயிரத்து 710 மனுக்கள் பின்னரும் தீர்வு செய்யப்பட்டுள்ளன. பொது மக்களிடையே அமோக வரவேற்பை பெற்றுள்ள இவ்வகை முகாம்களை நடத்தும் ஒரே மாநிலம் இந்தியாவிலேயே தமிழ்நாடு மட்டும்தான்.

**தமிழ்நாட்டில் குடும்ப அட்டை கோரி மனு செய்யும் அனைத்து தரப்பு மக்களுக்கும் அட்டைகள் வழங்கப்பட வேண்டுமென்ற மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவின்படி, நரிக்குறவர்களுக்கு 8,537 குடும்ப அட்டைகளும், மலைக்குறவர்களுக்கு 399 அட்டைகளும், திருநங்கைகளுக்கு 1,913 அட்டைகளும், காவலர்களுக்கு 56,290 அட்டைகளும், வனக்காவலர்களுக்கு 1,971 அட்டைகளும், தட்கல் முறையில் விண்ணப்பித்தோருக்கு 31,361 அட்டைகளும் என, இன்று வரை மொத்தம் 12 இலட்சத்து 15 ஆயிரத்து 368 புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.** மேலும், 27 ஆயிரத்து 350 புதிய குடும்ப அட்டைகள் மனுதாரர்களுக்கு வழங்குவதற்கு தயாராக உள்ளன. இன்று வரை, 4 இலட்சத்து 4 ஆயிரத்து 376 போலி அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டு ரத்து செய்யப்பட்டுள்ளன. புதிய குடும்ப அட்டைகள் கோரி பெறப்படும் மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்து 60 நாட்களுக்குள் அட்டைகள் வழங்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அலுவலர்களை அறிவுறுத்தினார்.

பொது விநியோகத் திட்டத்தினை கணினி மயமாக்க மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டதனை தொடர்ந்து, ஆயத்தப் பணிகள் துவக்கப்பட்டுள்ளன. முதற்கட்டமாக சென்னை மாநகரிலுள்ள சில நியாய விலைக்கடைகளில் குடும்ப அட்டைதாரர்களின் உறுப்பினர் எண்ணிக்கை, எரிவாயு இணைப்பு விவரம், செல்லிடை பேசி எண்கள் போன்ற தகவல்கள்

சேகரிக்கப்பட்டு வருகின்றன. ஆதார் எண் அல்லது தேசிய மக்கள் தொகை பதிவேடு பதிவு எண் ஆகிய விவரங்கள் அட்டைதாரரிடம் தற்போது கோரப்படவில்லை. சேவைத்தரம் உயர்த்தி வழங்கும் பொருட்டு, மேற்கொள்ளப்படும் அரசின் நடவடிக்கைகளுக்கு குடும்ப அட்டைதாரர்கள் போதிய ஒத்துழைப்பு தருவதை அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவின்படி, அத்தியாவசியப் பொருட்கள் கடத்தல், இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கப்பட்டுள்ளது. கடத்தல் தடுப்பு நடவடிக்கைகள் மூலம் **24,912** நபர்கள் கைது செய்யப்பட்டு அவர்களுள் **707** பேர் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் (BM Act) சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில் திறம்பட எடுக்கப்படும் கடத்தல் தடுப்பு நடவடிக்கைகளை ஏனைய மாநிலங்களும் பின்பற்ற வேண்டுமென மத்திய அரசின் உணவு மற்றும் பொது விநியோகத் திட்டத்துறை அனைத்து மாநிலங்களின் தலைமை செயலர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளது என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடத்தல் தடுப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மை செயலாளர் திரு. சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் திரு. சூ.கோபாலகிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் திரு. கா. பாலச்சந்திரன், இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், திருமதி. ஜெயஸ்ரீமுரளீதரன், இ.ஆ.ப., உணவுப் பொருள் குற்றப் புலனாய்வுத் துறை கூடுதல் இயக்குநர்திரு. கே.இராதாகிருஷ்ணன், இ.கா.ப., மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**